வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களில் வடக்கில் உயர் பாதுகாப்பு வலயங்களை அமைப்பதற்காக வெளியேற்றப்பட்டவர்களும் அடங்குவர். இந்த முகாம்களில் பெண்களும் சிறுவர்களும் பலவிதமான பிரச்சனைகளால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் சமீபத்திய அறிக்கைகள் ஊர்ஜிதம் செய்துள்ளன.

யுத்த காலத்திலும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பின்னும் கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் கள ஆய்வுகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்கள் எனக்கு கிடைத்தன. 2001 - 2003 காலகட்டத்தில் மட்டக்களப்பின் வந்தாறுமூலை, கொம்மாதுறைப் பகுதிகளில் மக்களின் வாழ்வாதாராப் பிரச்சனைகள் பற்றி ஆழமாக அறியும் நோக்கில் பலருடன் நீண்ட உரையாடல்களை மேற்கொண்டேன். இப்படியாக நான் நேர் கண்டவர்களில் பலர் வறிய பெண்கள். 1990 இல் வந்தாறுமூலை, கொம்மாதுறை கிராமங்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டன. அரச இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்ட பெரும் மோதலின் விளைவாக ஏறத்தாழ கொம்மாதுறை வாசிகள் அனைவரும் இடம் பெயர்ந்தனர். இராணுவத்தினர் பெருந்தொகையான இளைஞர்களை சுட்டுக் கொன்றனர். 1991 வரை இடம் பெயர்ந்தோரில் பலர் காடுகளில் மாதக்கணக்கில் வாழ்ந்தனர். 1991இல் அவர்கள் தம் வீடுகளுக்குத் திரும்பிய போது வீடுகளிலிருந்த பொருட்கள் சூறையாடப்பட்டிருப்பதை அறிந்தனர். தத்தமது வாழ்வாதாரங்களை மீளமைக்க முற்பட்டனர். ஆனால் இது தொடர்ச்சியான இக்கட்டான நிலைமைகளிலேயே இடம் பெற்றது. கொம்மாதுறை இலங்கை அரச இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்தது. அங்கு வாழ்ந்த மக்களின் பெரும்பாலானோரின் வாழ்வாதாரவளங்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பரந்த படுவான்கரையும் அதை அண்டிய பகுதிகளிலும் இருந்தன. இரண்டு அரசுகளுக்கு இடையே மக்கள் வாழ்ந்தனர் தொடர்ந்தும் வாழ்கிறார்கள். யுத்த நிறுத்தத்திற்கு முன்னர் ஒரு பகுதியிலிருந்து மற்றப் பகுதிக்கு போய் வர பல கடுமையான கட்டுப்பாடுகள்.

இக்காலகட்டத்தில் கொம்மாதுறையின் வறிய கிராமியத் தொழிலாளர்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டனர். இவர்கள் நிலமற்றவர்கள். ஒருசில குடும்பங்கள் பரம்பரையாக பிரப்பங் கைவேலைகளுக்கூடாக சீவனோபாயத்தைத் தேடுபவர்கள். இந்தத் தெழிலுக்குத் தேவையான மூலப்பொருட்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலேயுள்ள மேற்குப் பகுதியிலேயே இருக்கின்றன. காடுகளிலிருந்து இவற்றைப் பெறுவதற்கு செங்கலடி கறுத்தப் பாலத்தில் அமைந்துள்ள இராணுவ சோதனைச்சாவடியைக் கடந்தே செல்ல வேண்டும். இதேபோன்று இன்னொரு சாரார் மேற்கில் இருக்கும் கல்வாடிகளிலும், நெல் வயல்களிலும் கூலித் தொழிலாளர்களாக வேலை செய்பவர்கள். யுத்த காலத்தில் இவர்களது தொழில் வாய்ப்புக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தன. இவர்களிற் பலரிடம் தேசிய அடையாள அட்டைகள் இல்லாததால் இவர்களின் தொழில்ரீதியான நகர்ச்சிகள் சிரமமாகவே இருந்தன. சமாதான காலங்களில் மட்டக்களப்பிற்குள் மாத்திரமன்றி அக்கரைப்பற்று, பொலனறுவை போன்ற இடங்கள் வரை பயணம் செய்து கூலிக்கு வேலை செய்து தமது குடும்பங்களின் வாழ்வாதாரத்தைத் தேடுபவர்கள். இராணுவக்கட்டுப்பாடுகள், அவசரகாலங்கள் போன்றவற்றால் இவர்களின் நகர்ச்சி பாதிக்கப்பட்டது. இந்த கால கட்டத்திலும் இதற்கு முன்னரும் பெண் தொழிலாளர்களுக்கு உள்ளூரில் வாய்ப்புக்கள் இருக்கவில்லை. வறிய குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் 'சமுர்த்தி' ஆதாரத்தை தவிர வேறு உதவிகள் குறைவு. இடப்பெயர்வின் போது அரசு சாரா நிறுவனங்களின் மனிதாபிமான உதவி கிடைத்தது. பின்னர் அதுவும் நின்றுவிட்டது.

மறுபுறம் யுத்த காலத்திலும் தமது சொத்துக்களின் உதவியுடன் வீட்டுப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் முன்னேறியவர்களையும் கண்டேன். விவசாயநிலம் அதுவும் நீர்பாசன வசதியுள்ள விவசாயநிலம், சொந்த சேமிப்பு அல்லது உறவினரின் உதவி முதலீடு, செய்யக் கடன் பெறும் வசதி போன்ற சாதக நிலைமைகளைக் கொண்டோர் யுத்தகால நெருக்கடிக்குள்ளேயும் முன்னேறும் வாய்ப்புக்களைக் கொண்டிருந்தனர். இது போன்ற வேறு பல உதாரணங்களையும் தர முடியும். யுத்தத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயிர்மெய்
பெண்கள் காலாண்டிதழ்

## ஒரு திரைக்கதை

ஒரு சிறிய மரப்படகு
யாருமில்லாத வெறும்படகு
வேகமாய் வந்து கரைதட்டி நிற்கிறது.
யாருடைய வருகைக்காகவோ காத்திருப்பதாய்
கரையில் தனித்துக் கிடக்கிறது.
சிற்றலைகள் வந்து
புதினம் விசாரித்தவிட்டுப் போகின்றன.
யாரையுமே காணோம்.
கண்தொடுமிடம்வரை தேடுகிறது (கமறா வழியாக)
யாரும் வரக் காணோம்.
அந்தி சாயும் பொழுதில் கடல் சிவப்பாகிறது
அடிவானில் சரிந்துசெல்லலும் ஆதவன்
படகின் வயிற்றில் இறங்குவது போன்ற மாயை.
மாயை மட்டும்தான், நிசமல்ல.
ஒன்றன்பின் ஒன்றாக இரு காவாய்ப் பறவைகள்
கத்தியபடியே வந்து
படகில் தங்கிக் கொள்கின்றன.
காதலொன்றைச் சுமந்த மகிழ்வோடு
படகு கரைவிட்டகல்கிறது.
ஒளி மங்கிக் கொண்டிருக்கும் வானுக்கும்
கடலுக்குமிடையே விரைந்து செல்கிறது
காதலோடு சிறுபடகு.
குறும்படம் நிறைவுற்றது.

-தமயந்தி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org